ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
අති විශෙෂ அதிவிசேஷமானது

අංක 1804/20 - 2013 අප්‍රේල් 03 වැනි බදාදා - 2013.04.03
*1804/20 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 03 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

பிர.செ. குறிப்பு இல. : கேடீஎஸ்/கேஜீகே4/2/2009/02/24.
காணி அமைச்சின் தொடர்பு இல. : எல்டீ/5/2009/டப்எஸ்/293.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதைக் காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :

மத்திய மாகாணத்தில், கண்டி மாவட்டத்தில், கண்டி கங்கவட்ட கோரளை பிரதேச செயலாளர் பிரிவில், கங்கவட்ட கோரளை சிறுபிரிவில், வட்டாரந்தென்ன கிராம அலுவலர் பிரிவில், பிரிவு இல. 06 அஸ்கிரிய (கண்டி மாநகர சபை எல்லைக்குள்) மாப்பனாவத்துர கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவை நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட ஆ. ப. மஹ. 6241 இலக்கமும் 2013.03.06 ஆந் திகதியுமிடப்பட்ட ஆரம்ப வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மொத்த விஸ்தீரணத்தில் 0.0764 ஹெக்டயார் அளவுடைய மாப்பனாவத்துர எஸ்டேட் அல்லது புக்ரா எஸ்டேட் எனும் காணியில் காணித்துண்டு இல. 01 இன் விபரம் பின்வருமாறு :

**துண்டு இல. 01**

காணியின் பெயர் : மாப்பனாவத்துர எஸ்டேட் அல்லது புக்ரா எஸ்டேட் ; ஆரம்ப உரிமை கோருபவர்: முகாமையாளர், ரியெலிட் எஸ்டேட் டிவெலொப்பர்ஸ் (தனியார்) கம்பனி, ஆலய வீதி, கொழும்பு 01 ; விஸ்தீரணம் : 0.0764 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2013 ஆம் ஆண்டு மே மாதம் 29 ஆந் திகதி பி. ப. 2.30 மணிக்கு கண்டி, கங்கவட்ட கோரளை பிரதேச செயலகத்தில் என்முன்பாக வெளிப் படுத்தும்படியும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2013 ஆம் ஆண்டு மே மாதம் 22 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதி களாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

டீ. எம். என். ஜீ. ஜீ. டி. கருணாரத்ன,
பிரதேச செயலாளர்,
கண்டி, கங்கவட்ட கோரளை.

பிரதேச செயலகம்,
கண்டி, கங்கவட்ட கோரளை,
2013.03.28.

04 - 498